ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,452—1962 දෙසැම්බර් 28 වැනි සිකුරාදා—1962.12.28

13,452 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 697 | "மதுவரிச சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 68 ம் பிரிவின் கீழ் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் சேவை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரீ. பீ. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

கொழும்பு,
1961 ம் ஆண்டு ஜுலை மாதம் 20 ந் தேதி.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன 1 ம் இலக்க (நிலைமை அறிக்கை) ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. எதேனும் ஆதனம் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையாக்கப்படின் அல்லது கூட்டுத் தாபனத்திற்காகச் சுவீகரிக்கப்படின் அவ் ஆதனத்துள் அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளர் அல்லது அவரால் அதற்காக அதிகாரம் வழங்கப்பட்டவர் எவரும் அல்லது பொது முகாமையாளர் அல்லது அவரால் அதற்கென அதிகாரம் வழங்கப்பட்டவர் எவரும் தேவையான அத்தகைய ஆட்கள், கருவிகள், ஆயுதங்கள் முதலியன வற்றுடன் அவ் ஆதனத்தின் நிலைமை பற்றிய (இதனகத்துப் பின்னர் "நிலைமை அறிக்கை" எனக் குறிப்பிடப்படும்) அறிக்கையைத் தயாரிப்பதற்கெனப் பிரவேசிக்கலாம், பரிசோதிக்கலாம், எல்லையிடலாம், வேறும் தேவையான நடவடிக்கைகளையும் அவ்வாதனம் சம்பந்தமாக எடுக்கலாம்.

3. 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட ஆள் எவரும், எவ்வாதனத்தைப் பற்றி ஓர் நிலைமை அறிக்கை தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது எனவும் அவ்வாதனத்தில் அக்கறை கொண்டுள்ள எவருமாவது அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அவரின் பிரதிநிதி ஆவது, ஓர் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் தோற்றி நிலைமை அறிக்கை தயாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் ஒரு விளம்பரத்தை கசெற்றிலும் இலங்கையில் இயங்கும் ஒரு சிங்கள, தமிழ், ஆங்கில புதினப் பத்திரிகையிலும் பிரசுரித்தல் வேண்டும்.

4. மேற்கூறிய ஒழுங்கு விதியின் கீழ் கொடுக்கப்படவேண்டிய விளம்பரம் நிலைமை அறிக்கை தயாரிக்கப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆதனத்திலோ அல்லது அதற்கு அருகாமையிலோ, சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஒரு பகிரங்கமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டால், அவ்விளம்பரம் அக்கறை கொண்ட ஒவ்வொருவருக்கும் எல்லா நோக்கங்களுக்காகவும் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

### முக்கிய விளம்பரம்

*1963 ஆம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 9 ந் திகதி புதன்கிழமை, அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1963 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 11 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1963 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 5 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1962 ம் ஹூ மார்கழி (டிசெம்பர்) மீ 28 ந் வ.

5. அக்கறை கொண்டவரும் அல்லது அவரது பிரதிநிதியும் கீழ்கண்டவாறு நடக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் :—

(அ) 2 ம் ஒழுங்குவிதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு நிலைமை அறிக்கை தயாரிக்கப்படும் ஆதனத்தைப் பற்றி அவரால் கேட்கப்படும் செய்திகளைக் குறிப்பிட்ட ஓர் தேதிக்கு முன் கொடுத்தல் ;

(ஆ) 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு அவரால் கேட்கப்படும் இருப்புப் புத்தகம் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், ஆதன இடாப்புகள், உண்டியல்கள் அனுப்பு பொருட் பட்டியல்கள், (இன்வோயிஸ்கள்) வேறு சாதனங்கள் ஆகியவற்றைக் கொடுத்தல்.

(இ) 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு அல்லது வழங்கப்பட்டவர்களுக்கு நிலைமை அறிக்கை தயாரிப்பதற்குத் தேவையான உதவிகளை அளித்தல் ;

6. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நிலைமை அறிக்கை தயாரிப்பதற்கு 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவர் எவரும் :—

(அ) ஆதனத்தைப் பற்றி யாராவது அல்லது எவ் ஸ்தாபனமாவது (பொது அல்லது தனியார் துறை) அல்லது அரசாங்கப் பகுதி யாவது வைத்திருக்கும் அல்லது பரிபாலித்து வரும் பதிவுப்புத்தகம், சாதனம் அல்லது புத்தகம் எதையேனும் தருவிக்கலாம், அவற்றைப் பரிசோதித்துப் பிரதிகள் எடுக்கலாம் ;

(ஆ) அவ் ஆதனத்தைப் பற்றிய செய்திகளை ஒரு குறிப்பட்ட தேதிக்கு முன் கொடுக்கும்படி யாரையாவது பணிக்கலாம்.

7. நிலைமை அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததும், அவ்வறிக்கையின் பிரதி ஒன்று 3 ம் ஒழுங்கு விதியின் கீழ் செய்த விளம்பரத்தின் பேருக சமூகம் தந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொடுக்கப்படல் வேண்டும்.

8. அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரும், நிலைமை அறிக்கையின் பிரதி ஒன்று கிடைக்கப்பெற்ற பின் உடனேயோ அல்லது குறிப்பிட்ட தேதிக்கு முன்னரோ 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு, அவ்வறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களையும், கூற்றுக்களையும் தான் ஏற்றுக்கொள்கிருரா இல்லையா என்பதை அறிவிக்க வேண்டியது அவரின் கடமையாகும்.

9. நிலைமை அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களையும், கூற்றுக்களையும் அக்கறை கொண்டுள்ள ஒருவர் ஏற்றுக்கொள்ளாமல் இருக்குமிடத்து அவர் 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு எழுத்துமூலம் தான் எந்தெந்த இடத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை என்பவற்றைக் கூறி தன் கூற்றுக்கு அனுசரணையாக இருக்கும் எழுத்து மூலமான அல்லது வேறு விதமான சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது அவரின் கடமையாகும்.

10. அக்கறையுடைய ஆள் எவரேனும் எக்காரணத்தைக் கொண்டேனும் 8 ம் ஒழுங்கு விதிக்கமைய நடப்பதற்குத் தவறினுல் அசட்டை செய்தால் அல்லது மறுத்தால் அவர் எல்லா நோக்கங்களுக்கும் நிலைமை அறிக்கையில் கூறப்பட்ட எல்லா விடயங்களையும் ஏற்றுக்கொண்டவர்களாகக் கருதப்படுவர். அந்நிலைமை அறிக்கையின் செம்மையைப் பிணக்குச் செய்வதிலிருந்து தடுக்கப்படுவர்.

11. மேற்போந்த ஒழுங்கு விதிகளின் கீழ் செய்யப்பட்டு பிரதான மதிப்பீட்டாளரால் அல்லது அவரின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியால் கைச்சாத்திடப்பட்ட நிலைமை அறிக்கை கூட்டுத்தாபனத்திற்கு உரிமையாக்கப்பட்ட அல்லது அதற்காகச் சுவீகரிக்கப்பட்ட ஆதனத்தின் நிலைமை பற்றி கூட்டுத்தாபனத்தினுல் அல்லது அதன் அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்ட அறிக்கையாகக் கருதப்படும்.

12. இவ்வொழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாக வேண்டி நின்றுலன்றி " சட்டம் " என்பது 1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றேரலியக் கூட்டுத்தாபனச் சட்டம் எனப் பொருள்படும்.

" கூட்டுத்தாபனம் " என்பது, இலங்கைப் பெற்றேரலியக் கூட்டுத் தாபனம் எனப் பொருள்படும்.

" பொதுமுகாமையாளர் " என்பது, இலங்கைப் பெற்றேரலிய கூட்டுத் தாபனத்தில் பொதுமுகாமையாளர் எனப் பொருள்படும்.

" ஆதனம் " என்பது, நிலைமை அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எனப் பொருள் படும்.

" அக்கறை கொண்ட ஆள் " என்பது, இலங்கைப் பெற்றேரலியக் கூட்டுத்தாபனத்தின் 78 ம் பிரிவிலுள்ள கருத்தையே உடையதாகும்.

12—1028.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னுல் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1962 ம் ௵ டிசம்பர் ௴ 19 ந் உ.

ரீ. பீ. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 7.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), பொலன்னறுவ நிர்வாக மாவட்டம் | உபஉணவுப் பொருட்கள் .. | 12.11.62 ந் திகதியைக்கொண்ட 13,391 ம் இலக்க |
| 8.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), குருணுகல மாவட்டம் | ஷை .. .. | 12.11.62 ந் திகதியைக்கொண்ட 13,391 ம் இலக்க |
| 13.11.62 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. .. | உப உணவுப் பொருட்கள் (சர்க்கரை) | 13.11.62 ந் திகதியைக்கொண்ட 13,392 ம் இலக்க |
| 14.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யாழ்ப்பாண மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 19.11.62 ந் திகதியைக்கொண்ட 13,397 ம் இலக்க |
| 12.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தறை மாவட்டம் | ஷை .. .. | 19.11.62 ந் திகதியைக்கொண்ட 13,397 ம் இலக்க |
| 10.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொழும்பு மாவட்டம் | ஷை .. .. | 19.11.62 ந் திகதியைக்கொண்ட 13,397 ம் இலக்க |
| 20.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கம்பாந்தோட்டை மாவட்டம் | ஷை .. .. | 26.11.62 ந் திகதியைக்கொண்ட 13,403 ம் இலக்க |
| 19.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), குருணுகல மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் (சர்க்கரை) | 26.11.62 ந் திகதியைக்கொண்ட 13,403 ம் இலக்க |
| 23.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அம்பாறை மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 3.12.62 ந் திகதியைக்கொண்ட 13,420 ம் இலக்க |
| 29.11.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), வவுனியா மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் (கோதுமை மா) | 3.12.62 ந் திகதியைக்கொண்ட 13,420 ம் இலக்க |
| 6.12.62 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரெலிய மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் (சர்க்கரை) | 10.12.62 ந் திகதியைக்கொண்ட 13,427 ம் இலக்க |
| 3.12.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மன்னுர் மாவட்டம் | உபஉணவுப் பொருட்கள் (மாசிக்கருவாடு, போனிட்டோமீன், முறி மீன்) | 10.12.62 ம் திகதியைக்கொண்ட 13.427 ம் இலக்க |
| 6.12.62 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), புத்தளம் நிர்வாக மாவட்டம் | உப உணவுப் பொருட்கள் .. | 10.12.62 ந் திகதியைக்கொண்ட 13,427 ம் இலக்க |

12—1027

## விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க "தொற்றுநோய்கள்" (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4 உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 2.11.62 ல் வெளியான 13,371 ம் இலக்க வர்த்தமானியில் தம்பலகாமம் பற்றுப் பிரிவில் இருந்ததாக பிரகடனப்படுத்தப்பட்ட தொண்டைக் கரப்பான் என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்கு வருகின்றது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருக வைத்தியர் களரி, பேராதனை,
1962 ம் ஆண்டு டிசம்பர் மீ 18 ந உ.

12—1069/1.

## விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க "தொற்றுநோய்கள்" (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4 உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 16.11.62 ல் வெளியான 13,394 ம் இலக்க வர்த்தமானியில் கொட்டியார் பற்று பிரிவில் இருந்ததாகப் பிரகடனப் படுத்தப்பட்ட தொண்டைக்கரப்பான் என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்கு வருகின்றது.

அபேரத்ன பண்டாரநாயக,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருக வைத்தியர் களரி, பேராதனை.
1962 ம் ஆண்டு டிசம்பர் மீ 18 ந உ.

12—1069/2.

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.